# தமிழ்நாடு தகவல் ஆணையம்

எண்.19, அரசு பண்ணை இல்லம், பேன்பேட்,

நந்தனம், சென்னை - 600 035. தொலைபேசி எண்.044-29515590.


**ஆணை நாள்.02.06.2026**

**முன்னிலை**

**திரு. ரா. பிரியகுமார், பி.எஸ்.சி., பி.எல்.,**
**மாநிலத் தகவல் ஆணையர்**

*****

**வழக்கு எண்கள்.SA 15499/B/2024, CP 5372/B/2024**

திரு. செ. காஞ்சித்தலைவன் ... மேல்முறையீட்டாளர்

*/எதிர்/*

பொது தகவல் அலுவலர்,
தலைமை ஆசிரியர்,
டி.ஏ.கே.எம்.ராமம்மாள் துவக்கப்பள்ளி,
இராஜபாளையம்-626108.

பொது அதிகார அமைப்பு

பொது தகவல் அலுவலர்,
வட்டார கல்வி அலுவலர்,
வட்டார கல்வி அலுவலகம்,
இராஜபாளையம்,
விருதுநகர் மாவட்டம்-626117.

**ஆணை**

இவ்வாணையத்தால் (12.02.2026) அன்று விசாரணை மேற்கொள்ளப்பட்டு பிறப்பிக்கப்பட்ட உத்தரவினைத் தொடர்ந்து மனுதாரர் திரு. செ. காஞ்சித்தலைவன் மற்றும் பொது அதிகார அமைப்பின் சார்பாக பொது தகவல் அலுவலர், திருமதி. ந. லதா, தலைமையாசிரியை (பொறுப்பு), டி.ஏ.கே.எம். ராமம்மாள் துவக்கப்பள்ளி, இராஜபாளையம் அவர்கள் (02.06.2026) இன்று ஆணையத்திற்கு நேரில் ஆஜரானார்கள்.

2. மனுதாரர் சட்டப் பிரிவு 6(1) மனுவில் இனம் 15-இல், 23.08.2024-ஆம் தேதி வட்டார கல்வி அலுவலகத்தில் நேரடியாக வழங்கிய மனுவின் மீது எடுக்கப்பட்ட நடவடிக்கையின் விவரத்தினை அளிக்குமாறு கோரியுள்ளார்.

3. இன்று (02.06.2026) முற்பகல் நடைபெற்ற விசாரணையின் முடிவில் மனுதாரருக்கு ரூ.2,500/- இழப்பீடாக வழங்க உத்தரவிடப்பட்டிருந்த நிலையில், முதன்மைக் கல்வி அலுவலர், விருதுநகர் அவர்களிடமிருந்து 30.05.2026 தேதியிடப்பட்ட அறிக்கையானது தபால் வாயிலாக

இன்று (02.06.2026) பிற்பகல் ஆணையத்திற்கு கிடைக்கப்பெற்ற காரணத்தினால் மனுதாரருக்கு ரூ.2,500/- இழப்பீடாக வழங்க இடப்பெற்ற உத்தரவானது ஆணையத்தால் திரும்பப் பெறப்படுகிறது.

4. மேற்கூறிய திரு.கு.அரவிந்தன், முதன்மைக் கல்வி அலுவலர், விருதுநகர் அவர்களுடைய 30.05.2026 தேதியிட்ட அறிக்கையில், இவ்வழக்கு சார்ந்த அலுவலர்களிடம் விசாரணை மேற்கொள்ளப்பட்டுள்ளதாகவும், விசாரணையின் முடிவில் சார்ந்த அலுவலர்களிடம் வழக்கு தொடர்பான கூடுதல் ஆவணங்களை சமர்ப்பிக்க வலியுறுத்தப்பட்டுள்ளதாகவும், இந்நிலையில் பத்தாம் வகுப்பு மற்றும் மேல்நிலை முதலாம் / இரண்டாம் வகுப்பு பொதுத் தேர்வு முடிவுகள் தொடர்பான பகுப்பாய்வு கூட்டங்கள், மாவட்ட ஆட்சியர் தலைமையிலான ஆய்வுக் கூட்டங்கள், மாண்புமிகு அமைச்சர் தலைமையிலான கூட்டம் ஆகிய நிகழ்வுகள் தொடர்ச்சியாக நடந்தமையினாலும் சார்ந்த அலுவலர்களிடம் வழக்கு தொடர்பான கூடுதல் ஆவணங்கள் பெறப்பட வேண்டியுள்ளதாலும் விசாரணை அறிக்கையினை ஆணையத்திற்கு உரிய காலத்தில் சமர்ப்பிக்க இயலவில்லை, எனவே இவ்வழக்கு தொடர்பான விசாரணை அறிக்கையினை பரிசீலித்து என்ன உத்தரவு வழங்கலாம் என்ற விவரத்தினை சமர்ப்பிக்க கூடுதலாக பத்து நாட்கள் அவகாசம் வழங்குமாறு ஆணையத்திடம் கேட்டுக்கொண்டதற்கிணங்க ஆணையம் கீழ்க்கண்ட உத்தரவினைப் பிறப்பிக்கின்றது:-

- முதன்மைக் கல்வி அலுவலர், விருதுநகர் அவர்களுக்கு இவ்வழக்கு சம்பந்தமான அறிக்கையினை சமர்ப்பிப்பதற்கு 10 நாட்கள் கால அவகாசம் வழங்கப்பட்டு, அந்த அறிக்கையினை <u>30.06.2026</u> அன்றைய தேதிக்குள் ஆணையத்திற்கு பதிவு அஞ்சல் வாயிலாக சமர்ப்பிக்குமாறு உத்தரவிடப்படுகிறது.

- மனுதாரருடைய 23.08.2024 தேதியிட்ட மனுவின் மீது எடுத்த நடவடிக்கை குறித்து தகவல் வழங்கும்படி **பொது தகவல் அலுவலர் / வட்டார கல்வி அலுவலர் - I, வட்டாரக் கல்வி அலுவலகம், இராஜபாளையம்** அவர்களுக்கு உத்தரவிடப்படுகிறது. பொது தகவல் அலுவலரிடம் 23.08.2024 நாளிட்ட மனுவினுடைய நகலானது கிடைக்கப்பெறவில்லையெனில் மனுதாரரிடமிருந்து அதனை பெற்று, ஆணையத்தின் உத்தரவு கிடைக்கப்பெற்ற ஒரு வார காலத்திற்குள் அதன் மீது துரிதமான நடவடிக்கை எடுத்து, அதனுடைய தகவலினை மனுதாரருக்கு சான்றொப்பமிட்டு வழங்கி, அந்த அறிக்கையினை <u>30.06.2026</u> அன்றைய தேதிக்குள் ஆணையத்திற்கு பதிவு அஞ்சல் வாயிலாக சமர்ப்பிக்குமாறு **பொது தகவல் அலுவலர் / வட்டார கல்வி அலுவலர் - I, வட்டாரக் கல்வி அலுவலகம், இராஜபாளையம்** அவர்களுக்கு உத்தரவிடப்படுகிறது.

**ஒம்/-(ரா. பிரியகுமார்)**
**மாநிலத் தகவல் ஆணையர்**

**//ஆணைப்படி//**

**உதவிப்பதிவாளர்**

**வழக்கு எண்கள்.SA 15499/B/2024, CP 5372/B/2024**

**பெறுநர்**

1. பொது தகவல் அலுவலர் /
வட்டார கல்வி அலுவலர்-1,
வட்டார கல்வி அலுவலகம்,
இராஜபாளையம்-626117.

2. முதன்மைக் கல்வி அலுவலர்,
முதன்மைக் கல்வி அலுவலர் அலுவலகம்,
ஆட்சியர் அலுவலக வளாகம்,
விருதுநகர் - 626002.

3. பொது தகவல் அலுவலர்,
தலைமை ஆசிரியர்,
டி.ஏ.கே.எம்.ராமம்மாள் துவக்கப்பள்ளி,
இராஜபாளையம்-626108.

4. மேல்முறையீட்டாளர்,
திரு. செ. காஞ்சித்தலைவன்,
எண்.156, வனமூர்த்தி லிங்கம் பிள்ளைத் தெரு,
முகவூர் அஞ்சல்,
இராஜபாளையம் தாலுகா,
விருதுநகர்-626111.

Copy to: File. GP PC
100626